நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

# 2021

**இடைநிலை மேற்பிரிவு : (ஆண்டு 9 , 10)**

Level : Intermediate Upper (Year 9 & 10)

**வழங்கப்படும் நேரம் : 120 நிமிடங்கள்**

Time Given : 120 Minutes

**உங்களுக்குத் தரப்பட்ட விடைத்தாளில் பதில்களைத் தருக.**

**ஆசிரியரின் கவனத்திற்கு :**
**மாணவர்கள் தாமாகவே வாசித்து பதில் அளிக்க வேண்டும்.**
**(ஆசிரியர்கள் வாசிப்பதில் உதவி செய்யலாகாது)**

# கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை - 2021 இடைநிலை மேற்பிரிவு (ஆண்டு 9, 10)

1-35 வரையான வினாக்களுக்குத் தரப்படும் விடைத்தாளில் சரியான பதிலை தெரிவு செய்க.

(புள்ளிகள் 1 × 35 = 35)

### வினாக்கள் 1-10

### பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.

01. தூரத்துப் பச்சை கண்ணுக்குக் குளிர்ச்சியாக இருக்கிறது என்பதை விளக்கும் பழமொழி:
   (அ) பருவத்தே பயிர் செய்
   (ஆ) துணை போனாலும் பிணை போகாதே
   (இ) இக்கரை மாட்டிற்கு அக்கரை பச்சை
   (ஈ) பச்சைப்பசேலென இருந்தது

02. சிறியோராயினும் எதோ ஒருவகையில் உதவுவர் என்பதை விளக்கும் பழமொழி:
   (அ) காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்
   (ஆ) சிறு துரும்பும் பல்லுக்குத்த உதவும்
   (இ) கீழோராயினும் தாழவுரை
   (ஈ) நொண்டிக்குதிரைக்கு சறுக்கியது சாட்டு

03. ஒரு நல்ல காரியத்தில் ஏற்படுகின்ற சிறு தவறு முழுக் காரியத்தையும் பாழாக்கிவிடும் என்பதை விளக்கும் பழமொழி:
   (அ) வெள்ளைக்கு இல்லை கள்ளச் சிந்தை
   (ஆ) ஆனைக்கும் அடி சறுக்கும்
   (இ) பந்திக்கு முந்து படைக்குப் பிந்து
   (ஈ) ஒரு குடம் பாலுக்கு ஒரு துளி விசம்

04. "உப்பிட்டவரை உள்ளளவும் நினை" என்ற பழமொழி உணர்த்துவது:
   (அ) உப்பு தந்தவரை உடனே நினை
   (ஆ) உணவு தந்து பராமரித்தவரை என்றும் மறவாதே
   (இ) உணவு கொடுத்து அனைவரையும் பேண்
   (ஈ) உப்பிருந்த பாண்டம் தானே உடையும்

05. "பசி வந்திடப் பத்தும் பறந்து போம்" என்ற பழமொழி விளக்குவது:
   (அ) பசி வந்தால் உணவு பலவும் உண்ணலாம்
   (ஆ) பசிக் கொடுமை ஒருவனது சிறப்புகள் அனைத்தையும் அழிக்கும்
   (இ) பசி மயக்கத்தைக் கொடுக்கும்
   (ஈ) பசித்தவனுக்கு உணவு தேவை

06. "உடும்புப் பிடி போல" என்ற உவமைத் தொடர் விளக்குவது:
   (அ) தனது தீர்மானத்தில் பிடிவாதமாய் நிற்பது
   (ஆ) தனது தீர்மானத்தை மாற்றுவது
   (இ) தனது தீர்மானத்தை விட்டுக் கொடுப்பது
   (ஈ) தனது தீர்மானத்தைத் தெரிந்து எடுப்பது

07. “கிணற்றுத் தவளை போல” என்ற உவமைத்தொடர் விளக்குவது:

(அ) உலக அனுபவம் பெற்றிருப்பது

(ஆ) உலக நடப்புகளை அறிந்திருப்பது

(இ) உலகத்தோடு ஒட்ட ஒழுகுவது

(ஈ) உலக நடப்புகளை அறியாதிருப்பது

08. “மேய்ப்போன் இல்லாத மந்தை போல” என்ற உவமைத்தொடர் உணர்த்துவது:

(அ) பராமரிக்கவும் வழிகாட்டவும் ஆளில்லை

(ஆ) பராமரிக்கவும் வழிகாட்டவும் ஆளுண்டு

(இ) தலைவன் உள்ள கூட்டம்

(ஈ) தலைவன் வழி நடத்தும் கூட்டம்

09. “மிதமிஞ்சிய ஆசை ஆபத்தானது” - இதில் “மிதமிஞ்சிய” என்பதற்கு நிகரான சொல்:

(அ) முறைகோடான

(ஆ) அநீதியான

(இ) அளவுக்கதிகமான

(ஈ) கணிசமான

10. “யாதும் ஊரே யாவரும் கேளிர்” - இதில் “கேளிர்” என்பது:

(அ) சுற்றத்தார்

(ஆ) பகைவர்

(இ) வெளிநாட்டார்

(ஈ) நாடோடிகள்

## வினாக்கள் 11-15

## பின்வரும் வாக்கியங்களுக்குப் பொருத்தமான முடிக்கும் சொற்களைத் தெரிவு செய்க.

11.அடுத்தவாரம் முதல் அனைத்துப் பாடசாலைகளும் வழமை போல ...............................

(அ) நடைபெறுகிறது

(ஆ) நடை பெற்றது

(இ) நடை பெறும்

(ஈ) நடைபெறுகின்றது

12. நண்பர்களோடு இணைந்து விமலனும் சுற்றுலா ...............................

(அ) சென்றனர்

(ஆ) சென்றான்

(இ) செல்வார்

(ஈ) செல்கின்றனர்

13. சிறந்த வீரர்களை உள்ளடக்கிய உதைப்பந்தாட்டக்குழு ஐரோப்பா நோக்கி ...............................

(அ) புறப்பட்டனர்

(ஆ) புறப்பட்டார்கள்

(இ) புறப்பட்டான்

(ஈ) புறப்பட்டது

14. இந்தமுறை தேர்தலில் அவர் எந்தவொரு கட்சியையும் சாராது சுயேட்ச்சையாகப் ...............................

(அ) போட்டியிடுகிறார்

(ஆ) போட்டியிட்டார்

(இ) நிற்கப் போகிறார்

(ஈ) நின்று வெல்வார்

15. நீர் இங்கே இருந்தீரென நான் அறிந்திருந்தால் ...............................

(அ) உடனே வருகிறேன்

(ஆ) உடனே வந்திருந்தேன்

(இ) உடனே வருவேன்

(ஈ) உடனே வந்திருப்பேன்

## வினாக்கள் 16 - 20

## பின்வரும் வாக்கியங்களை அதே அமைப்பில் இணைப்புச் சொல்லை தெரிவு செய்க.

16. நான் அவரை எதிர்த்துப் பேசவில்லை. அவரது பேச்சில் நியாயம் இருந்தது.

(அ) அதனால்

(ஆ) ஏனெனில்

(இ) ஆகவே

(ஈ) அப்படியானால்

17. மழை பொழிந்தது. கிணறு நிறையவில்லை.

(அ) ஆயினும்

(ஆ) அதனினும்

(இ) இதனினும்

(ஈ) ஏதினும்

18. நான் இப்புத்தகத்தைப் பலமுறை வாசித்தேன். எனக்கு இது முழுமையாக விளங்கவில்லை.

(அ) எதனாலும்

(ஆ) ஆனாலும்

(இ) எனவே

(ஈ) ஆகவே

19. நீ அந்த விழாவுக்கு வந்திருந்தாய். நான் உன்னைக் காணவில்லை.

(அ) அதனால்

(ஆ) எதனால்

(இ) ஆனால்

(ஈ) எப்படியானால்

20. அதிகாலை எழுந்து ஆயத்தமானேன். பாடசாலைக்கு நேரத்திற்கு வந்தேன்.

(அ) அதனால்

(ஆ) ஆனால்

(இ) எப்படி

(ஈ) முன்னரே

## வினாக்கள் 21 - 25

## பின்வரும் வினாக்களுக்குரிய சரியான விடையைத் தெரிவு செய்க.

21. பின்வரும் சொற்களுள் பெண்பாலை உணர்த்தும் சொல்:

(அ) புத்திசாலி

(ஆ) செவிலி

(இ) தொழிலாளி

(ஈ) பரிகாரி

22. இடையரும் இடை மகளிரான ஆச்சியரும் வாழும் இடம்:

(அ) குறிஞ்சி

(ஆ) முல்லை

(இ) மருதம்

(ஈ) நெய்தல்

23. எதிர்கால நிகழ்வுகளை முன்கூட்டியே அறியும் ஆற்றல் படைத்தவன்:

(அ) பிரதிவாதி

(ஆ) விகடகவி

(இ) வாதி

(ஈ) தீர்க்கதரிசி

24. அறிவு, நிலா என்ற பொருள்களை தரும் சொல்

(அ) ஞாயிறு

(ஆ) திங்கள்

(இ) மதி

(ஈ) உடு

25. இல்லை என்று கூறாது எவருக்கும் எதையும் அன்போடு வாரி வழங்குபவன்:

(அ) அரசன்

(ஆ) வள்ளல்

(இ) குறுநிலமன்னன்

(ஈ) முதலமைச்சன்

## வினாக்கள் 26 - 30

## பின்வரும் வாக்கியங்களில் பிழையாக எழுதப்பட்ட சொல்லின் சரியான வடிவத்தை தெரிக.

26. பான்டியர்கள் சங்கம் அமைத்துத் தமிழை வளர்த்தனர்:

(அ) சங்கம்

(ஆ) பாண்டியர்கள்

(இ) தமிழ்

(ஈ) அமைந்து

27. எதையும் ஆராந்து பார்த்து ஏற்றுக் கொள்ளும் இயல்பு சிறந்தது:

(அ) ஆராய்ந்து

(ஆ) கொல்லும்

(இ) இயல்பு

(ஈ) பார்த்து

28. புலவர், அந்தனர் முதலானோருக்கு அரசன் வாரி வழங்கினான்.

(அ) புலவர்

(ஆ) வளங்கினான்

(இ) அந்தணர்

(ஈ) அரசன்

29. எதைச் செய்தாலும் அதற்குக் கனக்கு வைத்திருக்கவேண்டும்.

(அ) செய்தாலும்

(ஆ) கணக்கு

(இ) அதுக்கு

(ஈ) வைத்திருத்தல்

30. வண்டியில் பெரும்பாரத்தை ஏற்றியதால் அச்சாணி முறிந்தது.

(அ) பெரும்பாரம்

(ஆ) வண்டி

(இ) அச்சாணி

(ஈ) ஏற்றியதால்

## வினாக்கள் 31 - 35

## பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.

31. பாரதியாரின் பாடல்களைப் பாமரரும் படித்து இன்புறுகின்றனர். இதில் பாமரர் என்பதன் எதிர்ச் சொல் என்ன?

(அ) அறிவிலிகள்

(ஆ) நகரத்தார்

(இ) பண்டிதர்

(ஈ) புத்திசாலிகள்

32. தன்னிடமிருந்த சூட்சுமத்தை எல்லாம் மெல்ல மெல்ல வெளியே கூறினாள் இதில் சூட்சுமம் என்பதன் பொருள் என்ன.

(அ) ஆழம்

(ஆ) இரகசியம்

(இ) அறிவு

(ஈ) பண்பு

33. மாமரத்தின் இளையது மாங்கன்று போல வாழையின் இளையது ..

(அ) பிள்ளை

(ஆ) கன்று

(இ) குட்டி

(ஈ) குருளை

34. வாகனம் ஓட்டுபவன் சாரதி என்பது போல விமானம் ஓட்டுபவன்.

(அ) மீகாமன்

(ஆ) வலவன்

(இ) விமானி

(ஈ) உமணன்

35. காற்று + ஒலி என்பதைச் சேர்த்தால் சரியானது

(அ) காட்டொலி

(ஆ) காற்டொலி

(இ) காற்றாலி

(ஈ) காற்றொலி

பகுதி -2

வினாக்கள் 36 - 40 (தரப்பட்ட விடைத்தாளில் பதிலை எழுதுக )

(புள்ளிகள் 5×1 = 5)

பொருத்தமான சொற்றொடர்களைத் தெரிந்து வாக்கியங்களில் உள்ள இடைவெளியை நிரப்புக.

1. உள்ளும் புறமும்
2. கள்ளங்கபடம்
3. கூடிக்குலாவி
4. இரவு பகலாக
5. வரவு செலவு

36. சீராளனின் பிறந்த நாள் கொண்டாட்டத்திற்காக அவனது வீடு ........................................அலங்கரிக்கப்பட்டது.

37. எனது தாயார் ஒவ்வொரு மாதமும் வீட்டு ........................................கணக்கை எழுதி வைப்பார்.

38. அந்நியரை கண்டபோதும் குழந்தை ........................................இல்லாமல் வாய்நிறையச் சிரித்தது.

39. சுற்றுலாவுக்குச் சென்ற நண்பர்கள் ........................................மகிழ்ச்சியாகப் பொழுதைக் கழித்தனர்.

40. ஒப்பந்த வேலையைச் சொன்னபடி குறித்தகாலத்தில் முடிப்பதற்காக ........................................ வேலை செய்தனர்.

வினாக்கள் 41- 45 (தரப்பட்ட விடைத்தாளில் பதிலை எழுதுக )

(புள்ளிகள் 5×1 = 5)

பின்வரும் வினாக்களுக்குப் பொருத்தமானவர்களைத் தெரிவு செய்க.

| பாரதியார், செயங்கொண்டார், ஔவையார், சீத்தலைச் சாத்தனார், நக்கீரர் |
|---|

41. மூதுரை........................................

42. கண்ணன் பாட்டு ........................................

43. மணிமேகலை ........................................

44. திருமுருகாற்றுப்படை ........................................

45 கலிங்கத்துப் பரணி ........................................

வினாக்கள் 46 - 50 (தரப்பட்ட விடைத்தாளில் பதிலை எழுதுக )

(புள்ளிகள் 5×2 = 10)

பின்வரும் வாக்கியங்களில் வந்துள்ள ஆங்கில சொற்களுக்குப் பொருத்தமான தமிழ்ச் சொல்லை எழுதுக:

46. பிரதமரின் உரை E-Magazine இல் வந்துள்ளது

E-Magazine என்பது ........................................

47. வீதிவிபத்து நடந்த பின்புதான் உயிரின் value தெரிகிறது

Value என்பது ........................................

48. தொலைக்காட்சி நிகழ்ச்சி ஒன்றில் ஆஸ்திரேலியத் தமிழ் எழுத்தாளர் ஒருவரின் Interview இடம் பெற்றது

Interview என்பது .......................................

49. கொரோனா விழிப்புணர்வு பற்றிய Phamlet ஐ மக்களுக்கு வழங்கினார்

Phamlet என்பது .......................................

50. சீதா, தாய் நாட்டிலிருக்கும் தனது பாட்டியுடன் Skype மூலம் கதைத்தாள்

Skype என்பது .......................................

## வினாக்கள் 51 - 54 (தரப்பட்ட விடைத்தாளில் பதிலை எழுதுக )

(புள்ளிகள் 4×2 = 8)

### பின்வரும் பேச்சு வழக்கு தொடர்களை எழுத்து வழக்கு தொடர்களாக மாற்றி எழுதுக:

51. “அங்க தான் ஒண்ட கெட்டித்தனமிருக்கு”

______________________________

52. “ அவன் வினவியத்துக்கு பாலன் பலிச்செண்டு பதில் சொன்னான்”

______________________________

53. “பல்லிக்கு கிட்டத்தான் எண்ட வீடு இருக்கு”

______________________________

54. “ இவனோட நாங்கள் ஒண்டும் செஞ்சிடேலாது”

______________________________

## பகுதி - 3

### கீழ்வரும் உரைப்பகுதியை வாசித்து வினாக்களுக்கு விடை எழுதுக

(புள்ளிகள் 12)

நூறு ஆண்டுகளின் முன் எமது சமூகம் உற்பத்தியை அடிப்படையாக கொண்டிருந்தது. ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகை உற்பத்தியில் ஈடுபட்டனர். அவற்றைத் தம்மிடையே பரிமாற்றம் செய்தனர். இப்பண்டப் பரிவர்த்தனை அவரவர் தத்தமக்கு வேண்டியவற்றை நாடும் வகையில் அமைந்திருந்தது. எடுத்துக்காட்டாக, விவசாய உற்பத்தியாளர் தமக்கு வேண்டிய கருவிகளை, கைவினைத் தொழிலாளர்களிடம் தமது உற்பத்தி பண்டத்தை வழங்குவதன் வாயிலாகப் பெற்றனர். சந்தையில் அவசியமான பொருட்களை வாங்குவதோடு அமையாது கண்ணில் படும் ஆடம்பரப் பொருட்களையும் வாங்கினார்கள். இங்கே சத்தமிட்டு விளம்பரப்படுத்தும் தேவை சிறிதளவு இருந்த போதிலும் அது முக்கியத்துவம் உடையதாய் இருக்கவில்லை. பண்ட பரிமாற்றத்தில் சமப்படுத்தும் ஊடகமாகப் பணம் இருந்தாலும், பணத்துக்கு மேலதிக வலு இல்லாதிருந்தது..

இன்றைய தொழில்நுட்ப விருத்தி பெற்ற நவீன சமூகத்தில் பணம் வெறும் இடை ஊடகமாக இல்லை, இன்று பணம் தானே பெருகும் வல்லமை பெற்றதாக விளங்குகிறது எப்படியெனில் பலர் கூட்டமாக உழைத்து உற்பத்தி செய்யப்படும் பண்டம், தொலைவிலிருக்கும் சந்தைக்கு அனுப்பப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இங்கே பணம் பெருகும் பொருளாதார வாழ்வியலைக் காணலாம். இதனால் பண்டங்களை விளம்பரப்படுத்தல் இன்று அவசியமாகி உள்ளது. இன்றைய சமூகத்தில், உற்பத்தியில் நேரடியாக ஈடுபடாத மத்திய தர வர்க்கத்தினரே பெரும்பான்மையினராக உள்ளனர். இதனால் இன்றய யுகம் நுகர்வுப் பண்பாட்டுக்கு உரியதென சமூகவியலாளர்கள் கணித்துள்ளனர்.

நுகர்வுப் பண்பாட்டில் விளம்பரம் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளது.பலர் விளம்பரத்துறையைத் தமது வாழ்வாதாரத் தொழிலாக கொண்டுள்ளதைக் காணலாம். இலங்கைத் தமிழ்ச் சூழலில் ‘பல்துறைக் கலைஞர்‘ சில்லையூர் செல்வராஜன் நான்கு தசாப்தங்களுக்கு முன்பே விளம்பரத்தொழில் நிறுவனத்தைத் தனியே தொடங்கிய முன்னோடிகளுள் ஒருவராக இருந்தார். இலங்கை வானொலியில் நாற்பது ஆண்டுகளின் முன் ‘மக்கள் வங்கிக்கான‘ அவரது விளம்பரப்பாடல் பிரசித்தமானதாக இருந்தது.

விளம்பரம் என்பது ஒரு உற்பத்தி அல்லது சேவையின் சிறப்பைச் சுருங்கச் சொல்லி விளங்க வைப்பதாகவும் கேட்போரைக் கவர்வதாகவும், அந்த பொருளை அல்லது சேவையை விரும்பிப் பெறத் தூண்டுவதாகவும் இருக்கும். உற்பத்திப் பொருள் மீது அல்லது சேவையின் மீது கவனக் குவிப்பைச் செய்ய அவசியமான வர்ணனை முன்வைக்கப்படும். அதற்குப்பொருத்தமான காட்சிப்படுத்தலும் இடம் பெறலாம். குறைந்த வார்த்தைகளில் மிகுந்த தெளிவை ஏற்படுத்த வேண்டும்.

விளம்பரங்கள் பத்திரிகை, சஞ்சிகை, விழா மலர், வானொலி, தொலைக்காட்சி என்பவற்றில் அதிகம் இடம்பிடிக்கின்றன. பொது அறங்களை மீறாத வகையில் விளம்பரங்கள் அமைவதை உத்தரவாதப்படுத்த வேண்டும். புகைத்தல்-மது போன்றவற்றின் பாவனையை சினிமா, தொலைக்காட்சி, நாடகங்கள் போன்ற படைப்புகளில் காட்டும் போது "புகைத்தல், மது பாவனை என்பன உயிருக்குக் கேடு" என்ற வாசகம் இடம் பெறுவதைக் காணலாம். விளம்பரம் ஒவ்வொன்றிலும் சமூக அக்கறை கவனிக்கப்பட வேண்டும்.

## முழுமையான வசனத்தில் விடையளிக்கவும். (தரப்பட்ட விடைத்தாளில் பதில் எழுதவும்)

55. 'இன்றைய யுகம் நுகர்வு பண்பாட்டுக்குரியது 'எனச் சமூகவியலாளர் கணிக்கக் காரணம் யாது ?

(2 புள்ளிகள்)

56. பணத்தின் முக்கியத்துவத்தை இன்றைய நவீன சமூகத்திலும், நூறு ஆண்டுகளுக்கு முந்திய சமூகத்திலும் ஒப்பிட்டுக் கூறுக?

(2 புள்ளிகள்)

57. இன்று விளம்பரம் ஏன் அவசியமாகி உள்ளது?

(2 புள்ளிகள்)

58. நாற்பது ஆண்டுகளுக்கு முன் யாருடைய,எந்த விளம்பரப் பாடல் பிரபலம் பெற்றிருந்தது?

(2 புள்ளிகள்)

59. விளம்பரம் ஒன்றில் இருக்க வேண்டிய முக்கிய அம்சங்களாக எவற்றைக் கண்டீர்?

(3 புள்ளிகள்)

60. விளம்பரங்களை எங்கே காணலாம்?

(1 புள்ளி)

## பகுதி - 4

## 61. பின்வருவனவற்றில் <u>ஒன்றைத்</u> தெரிந்து 150 சொற்களில் கட்டுரை எழுதுக.

(புள்ளிகள் 25)

01. எமது தாய்மொழி தமிழுக்கு செம்மொழி அந்தஸ்துக் கிடைத்துள்ளது. தமிழின் தொன்மை இலக்கிய, இலக்கண வளம், அதன் சிறப்புகள் ஆகியன பற்றியும் தமிழ் மொழியைக கற்பதும், பேணுவதும் ,வளர்ப்பதும் எமது கடமை என்பதை வலியுறுத்தியும் , உமது தமிழ் பாடசாலையில் நீர் ஆற்றவுள்ள பேச்சை எழுதுக .

02. போக்குவரத்துச் சாதனங்கள் எமக்குத் தந்துள்ள வசதி வாய்ப்புகளையும், அவற்றால் உண்டாகின்ற பாதிப்புக்களையும் விளக்கிக் கட்டுரை எழுதுக.

03. இருபத்தோராம் நூற்றாண்டில் வாழும் நாம் விஞ்ஞானத்தின் உச்சத்தைத் தொட்டு விட்டோம் எனப் பெருமிதப் பட்டாலும் கண்ணுக்குத் தெரியாத நுண்ணிய கிருமியில் இருந்து மீளமுடியாதவர்களாய் முடங்கி உள்ளோம், மறக்கப்பட்ட தமிழர் வாழ்வியல் முறைகள் இதிலிருந்து எம்மைக் காப்பாற்ற உதவும் என்பதை விளக்கிக் கட்டுரை எழுதுக.

நியூ சவுத் வேல்ஸ் தமிழ்ப் பாடசாலைகள் கூட்டமைப்பு

NSW FEDERATION OF TAMIL SCHOOLS INC.

கலாநிதி வேந்தனார் இளங்கோ ஞாபகார்த்த
தமிழ்ப் புலமைச் சான்றிதழ்ப் பரீட்சை

# DR VENTHANAR ILANGO MEMORIAL TAMIL PROFICIENCY EXAMINATION

# 2021

Email:info@nswfts.org.au
www.nswfts.org.au